தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், எழும்பூர் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி தனது பிறந்தநாளை யொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

மீஞ்சூரில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் கழக ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் திருவுருவ படத்திற்கு கழக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து, அவரது புதல்வர்கள் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ்உதயன், பொறியாளர் அனி தமிழ் பிரியன் ஆகியோருக்கு ஆறுதல் கூறினார். உடன் பொன்னேரி நகராட்சி தலைவர் பரிமளம், மாவட்ட துணை செயலாளர் கதிரவன், மீஞ்சூர் ஒன்றிய செயலாளர்கள் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், ஜெகதீசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழ தலைவர் மீ.வீ.கோதன்டம், ஈ.நிலவழகன், தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார்.டி.எஸ்.கதிரவன் மற்றும் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் கழகத் தினர் கலந்து கொண்டனர்

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – மு.பெ.சாமிநாதன் – மு.சண்முகம் எம்.பி. நல உதவிகள் வழங்குகின்றனர்!

அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

கி.நடராசன் - எஸ்.முரளி - ஸ்ரீராமுலு பங்கேற்பு! எஸ்.வி.பிரபாகர் தலைமை!

சென்னை, அக். 7 -

அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - மு.பெ.சாமிநாதன், தொ.மு.ச. பேரவைத் தலைவர் மு.சண்முகம் எம்.பி., பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் கலைஞர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து நல உதவிகள் வழங்குகின்றனர்.

அரசு அச்சக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாள் விழா இன்று (7.10.2024 - திங்கள் கிழமை) மாலை 4 மணிக்கு சென்னை- 1, அரசு மைய அச்சக வளாகத்தில் அரசு அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் எஸ்.வி. பிரபாகர் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் அச்சக பொருளாளர் ஏ.ஜெய்சங்கர் வவேற்றுப் பேசுகிறார். இணைச் செயலாளர்கள் எஸ்.ஆனந்தன், டி.குமார், துணைத் தலைவர் கு.மனோகரன், துணைப் பொருளாளர் ஆர்.நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொ.மு.ச. பேரவைத் தலைவர் மு.சண்முகம் எம்.பி., தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து அரசு அச்சக ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் பிள்ளைக ளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் துறைமுகம் பகுதிச் செயலாளரும் அரசு அச்சக தொ.மு.ச. ஆலோசகருமான எஸ்.முரளி, 5-வது மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, அச்சக தொ.மு.ச. ஆலோசகரும் வட்டச் செயலாளருமான மா.ஜெய்சங்கர், அரசு அச்சக சட்ட ஆலோசகர் எஸ்.பி.எஸ்.புத்தன் உள்ளிட்டோர், அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

அரசு அச்சக தொ.மு.ச. துணைத் தலைவர் கே.பி. சாரதி நன்றி கூறுகிறார்.

பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் – அமைச்சர்.பி.கே.சேகர்பாபு முன்னிலையில் விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் மா.அசோக்குமார் தலைமையில் 16 அணிகள் பங்கேற்ற மாபெரும் கால்பந்து போட்டியை அமைச்சர் டாக்டர் .மதிவேந்தன் துவக்கி வைத்து கோப்பையும், முதல் பரிசாக ரூ.25,000/ இரண்டாம் பரிசாக 15,000/ மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார். உடன் மேயர் பிரியாராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எஃப். வ.முரளிதரன், எ.நாகராசன் மற்றும் பலர் இருந்தனர்.

காலாண்டு விடுமுறை முடிந்து – இன்று பள்ளிகள் திறக்கப்படும் நிலையில்

திருவண்ணாமலை - சண்முகா தொழிற்சாலை அரசு மேனிலைப்பள்ளியில் ஆய்வு!

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டார்!

சென்னை, அக்.7-

காலாண்டு விடுமுறை முடிந்து இன்று பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது 207ஆவது ஆய்வை திருவண்ணாமலையில் மேற்கொண்டார்.

திருவண்ணாமலை தொகுதியில் அமைந்துள்ள சண்முகா தொழிற்சாலை அரசு மேல்நிலைப்பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, மாதிரிப் பள்ளி மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாடினார். மாதிரிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 525 பேர் உலகின் தலைசிறந்த உயர்கல்வி நிலையங்களில் இணைந்துள்ளதை குறிப்பிட்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கலந்துரையாடினார்.

காலாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் இன்று திறக்கப்படும் நிலையில் பள்ளியின் அடிப்படை கட்டுமானங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளியின் கழிப்பறைகளை தூய்மையாக வைத்திருக்குமாறும், கட்டடங்களின் உறுதி தன்மையை ஆய்வுக்கு உட்படுத்துமாறும் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் மாணவர்களுக்கான குடிநீரின் தரத்தையும் பரிசோதிக்குமாறு உத்தரவிட்டார்.

கோலியனூர் கிழக்கு ஒன்றியம்

தாதம்பாளையம் - இளங்காடு கிளைக் களங்களில் கழக பவள விழா!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கழகக் கொடியேற்றி நல உதவிகளை வழங்கினார்!

விழுப்புரம், அக்.7-

விழுப்புரம் தெற்கு மாவட்டம் கோலியனூர் கிழக்கு ஒன்றியம் தாதம்பாளையம் மற்றும் இளங்காடு ஆகிய ஊராட்சிகளில் ஒன்றியச் செயலாளர் பி.தெய்வசிகாமணி தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கழகக் கொடி யேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்ட மருத்துவர் அணித் தலைவர் செந்தில்குமார், மாணவர் அணி சபரிநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், செயலாளர் கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார், ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் இரா.கண்ணப்பன், சௌந்தர், குணசேகர், ஜெயபால், ஸ்ரீதர்,

மாவட்ட கவுன்சிலர்கள் கேசவன், நகர பொருளாளர் இளங்கோ, ஒன்றிய குழு உறுப்பினர் சௌந்தர், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், இலக்கிய அணி வல்லவன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி சுரேஷ்பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், இளைஞர் அணி ராஜசேகர், முத்துக்குமார், பிரபாகரன், கிளைச் செயலாளர்கள் ராமஜெயம், பெரியசாமி, சம்பத், நெசவாளர் அணி செழியன், தகவல் தொழில்நுட்ப அணி எடிட்ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருசன், மணிவேல், இளங்காடு நிர்வாகிகள் குணா, மாணிக்கம், சதீஷ், பார்த்திபன், கருணா, கோகுல், முரளி, ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் சார்பில்

பொது உறுப்பினர்கள் கூட்டம்

நாள் : 07.10.2024 திங்கட்கிழமை,
இடம் : ரம்ஜான் மஹால், இராயபுரம்.
நேரம் : மாலை 06.00 மணிக்கு

தலைமை

உயர்திரு. ஆர்.டி.சேகர் B.Com., BL., MLA
பொறுப்பாளர் - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க

சிறப்புரை

முனைவர்
மாண்புமிகு அமைச்சர் க.பொன்முடி
M.A (His)., M.A(Pol.Sci)., M.A(Pub Admin)., Ph.,D.B.L.,
கழக துணை பொதுச்செயலாளர் மற்றும் வனத்துறை அமைச்சர்

டாக்டர். கலாநிதி வீராசாமி M.P., MS., FRCS (Edin) M.Ch (Plastic)
மாநில அயலக அணி தலைவர்

ஐடரீம் இரா. மூர்த்தி
இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்,

ஜே.ஜே.எபினேசர் M.Com., BL.,
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர்-மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

N. நவீன்
இராயபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்

பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகமுகவர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறோம்.

அன்புடன்

இரா. செந்தில் குமார் DME., இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர்
வ.பெ. சுரேஷ் Ex.MC., இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர்

இராயபுரம் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க

சோழிங்கநல்லூரில்

பல்வேறு திட்டப் பணிகள் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

சென்னை, அக். 7 -

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15 வார்டு எண் 195 ஒக்கியம் துரைப்பாக்கம் மேட்டுக்குப்பம் பகுதியில் உள்ளடக்கிய தலைமைச் செயலக குடியிருப்பு பகுதியில் ரூபாய் 76.40 லட்சம் மதிப்பிலும்

அழகாண்டேஸ்வரி நகர் பகுதியில் 53.50 லட்சம் மதிப்பிலும், பூங்காவை மேம்படுத்தும் பணியையும்

தலைமைச் செயலகம் பிரதான சாலையில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் அப்பணிகளை தொடங்கி வைத்தார்.

அதுபோது கழக பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.ஏழுமலை, வட்ட கழக செயலாளரும் மாமன்றஉறுப்பினருமான க.ஏகாம்பரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொது நல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இரா. துரைராஜன்
அக்டோபர் 7 (2017)

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.